ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி15 வெள்ளிக்கிழமை (01.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 317

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ரா
ம்
கோ
சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# த்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில் தலைவர் பிரபாவுக்கு 200 வருட சிறை

## கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

(கொழும்பு)

ங்கை மத்திய வங்கி குண்டு பு சம்பவ வழக்கில் குற்றவா க் காணப்பட்ட தமிழீழ விடு புலிகளின் தலைவர் வே.பிரபா உட்பட நான்கு பேருக்கு இரு, வருட கடூழியச்சிறைத்தண்டனை து கொழும்பு உயர் நீதிமன் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

திய வங்கி குண்டு வெடிப்புச் வழக்கின் தீர்ப்பை உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பே பிட்டிய வழங்கினார்.

இவ் வழக்கின் தீர்ப்பு 127 பக்கங் களை கொண்டது.

1996ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ந் திகதி மத்திய வங்கி கட்டடம் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற் றது.

இவ் வழக்கில் முதலாம் எதிரி யான விடுதலைப்புலிகளின் தலை வர் வே.பிரபாகரன், ஆறாம் எதிரி யான நவரட்ணராஜா, எட்டாம் எதிரியான ஸ்ரீ கணேஸ், பத்தாம் எதிரியான கமலநாதன் ஆகிய நால் வருக்குமே இருநூறு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குற்றவாளிகளின் அசை யும் அசையா சொத்துக்களை அர சுடமையாக்குமாறும், நால்வரையும் உடனடியாக கைது செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குற்றப்புலனாய்வுப் பணிப் பாளர் ஊடாக நால்வரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொலைகள், காயப்படுத்துதல், மற்றும் உடைமைகளைச் சேதப்படுத துதல் உட்பட 712 குற்றச் சாட்டுக் களின் அடிப்படையில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

மத்திய வங்கிக் கட்டடம் மீது குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு உத்தரவிட்டு ஒத்துழைப்பு வழங்கி னார் என்று 50 குற்றச் சாட்டுக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா மீது சுமத்தப்பட்டது.

இக் குற்றச்சாட்டுக்களை நீதிமன் றம் ஏற்றுக் கொண்டே அவருக்கு தண்டனை வழங்கத் தீர்மானித்ததாக தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் சிறையிருக்கும்

(10 பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்பின் மத்தியில்

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சு

# நேற்று தாய்லாந்தில் ஆரம்பம்!

### ந்துணர்வு ஒப்பந்தம் - உயர் பாதுகாப்பு வலயம்

### றித்து ஆராய்ந்ததாக அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(பாங்கொங் - அன்ரனி ஜீவா)

நூற்றம்பது நாட்களைக் கடந்த் நிலையில் அரசும் விடுதலைப் ளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஸ்திரத் ம தொடர்பாகவும், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோண ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள்



ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள்
ர்பாகவும் நேற்றைய பேச்சுவார்த்தையில் சுமுகமான முறையில்
ரையாடப்பட்டதாக அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை
ச் சென்ற அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கயரசுப் பிரதிநிதி குழுவுக்
ழ விடுதலைப்புலிகளின்
ள் குழுவுக்கும் இடையி
ண்டாம் கட்டப் பேச்சுவார்
முதலாம் சுற்று நேற்றுப்
மூன்று மணிக்கு தாய்
தலைநகர் பாங்கொங்கின்
ட தோம் நகரில் உள்ள

''றோஸ்கார்டன் ரிசோர்ட்'' ஹோட்டலில் ஆரம்பமாகியது.

**பாதுகாப்புடன் பேச்சுவார்த்தைக்கு அழைத்துவரப்பட்டனர்**

பேச்சுவார்த்ததை நடைபெறும் ஹோட்டலைச் சுற்றி தாய்லாந்துக் கடற்படையினரின் கண்காணிப்பு படகுகள் பலத்த பாதுகாப்பை வழங்கியது.

தாய்லாந்துப் பொலிஸ் படையும், விசேட அதிரடிப்படையினரும் பலத்த பாதுகாப்பு வழங்க பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பிரதிநிதி

(10ம் பக்கம் பார்க்க)

# ளிகாவத்தையில் தொடர்ந்து பதற்றம்
# தமர் தலைமையில் விசேட மாநாடு

## டையினர் உஷார் - ஊரடங்குச் சட்டம் அமுல்

(கொழும்பு)

ழும்பு மாளிகாவத்தைப்
நேற்று முன்தினம் இடம்
ன மோதலைத் தொடர்
கு பெரும் பதற்றம் நிலவி
இதனை அடுத்து மோத
கட்டுப்படுத்துமாறு ஜனாதி
ரிகா குமாரதுங்கா பொலி
திபருக்கு உத்தரவிட்டுள்

ழும்பு வடக்கு, மத்திய
உட்பட பல பகுதிகளி

லும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவரின் இறுதி ஊர்வலம் நடைபெற்றபோது நகரில் பதற்றம் நிலவியது.

இதனை அடுத்து அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் பாது காப்பு மாநாடு ஒன்று அவசரமாக கூட்டப்பட்டது. இம் மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா ஆகியோரும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இன்று வெள்ளிக்கிழமையாக இருப்பதால் பள்ளி வாசல்களில் தொழுகையில் ஈடுபடும் முஸ்லிம்கள் தொழுகை முடிந்ததும், அமைதியாக வீடுதிரும்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம், சிங்கள மக்களிடையே எழுந்துள்ள இன மோதல்

(10ம் பக்கம் பார்க்க)



# உயர் நீதிமன்றத் தீர்ப்பு சமாதானத்தைப் பாதிக்காது

## அமைச்சர் பீரிஸ் கருத்து

(பாங்கொங்)

மத்திய வங்கிக்குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட வழக்கின் தீர்ப்பு, தற்போது தாய்லாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை எந்தவிதத்திலும் பாதிக்கமாட்டாது என்று அமைச்சர் பேராசியரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட வழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் குற்றவாளியாகக் காணப்

(10ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் தொழிலுக்குச் சென்ற 3 மீனவர்களைக் காணவில்லை

(மந்திகை)

கடந்த மாதம் 29ம் திகதி கடலுககுச் சென்ற மூன்று மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை என்று அவர்களது உறவினர்கள வடமராட்சி அப்பர் மடம் கடற்றொழிலாளர் சங்கத்தில் முறையிட்டுள்

(10 பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் மறியல் போராட்டம்

(தென்மராட்சி)

மீசாலை புத்தூர் சந்தி வீதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள பொதுமக்களின் இல்லங்களில் தங்கியிருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் எனக்கோரி அப்பகுதியைச் சேர்ந்த

(10 பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப்படிவங்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) (கட்டிடம் நிர்மாணிப்பதற்கு) பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் / இந் நகரசபையில் ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள உரிய கேள்வி வைப்புப் பணம் கேள்விப் பத்திரப் பணம், பெ.சே வரி செலுத்துவதன் பேரில் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்த கேள்விப் பத்திரங்கள் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலிடுவதன் மூலமோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி முற்பகல் 10 30 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

காரணம் எவையும் காட்டப்படாது எக் கேள்வியையும் ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | பெறுமதி சேர்வரி 20% | மீளளிக்கப்படும் வைப்பு பணம் |
|---|---|---|---|---|
| 01. | ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் முன் வீதி | 250.00 | 50.00 | 1500.00 |
| 02 | தோட்டக்கலட்டி வீதி | 250 00 | 50.00 | 1500.00 |

மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ந. சிவபாலதருமகுலசிங்கம்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.
நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை 2002-10-25.

அ. வின்சன் கெனடி (ஜே.பி.யு.எம்)
தலைவர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

(இ-5207)

## வேலணை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றன.

| இல | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்படக்கூடியது) | கேள்விபத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாதது (வற் வரி 10% உட்பட) |
|---|---|---|---|
| 01 | அம்பிகை நகர் மீன் சந்தை புனரமைப்பு | 500-00 | 220.00 |
| 02 | தாய், சேய், நலன்புரி நிலைய புனரமைப்பு | 500-00 | 220-00 |
| 03 | நவலர்ச.சநிலைய பாலர் பாடசாலை புனரமைப்பு | 500-00 | 220-00 |
| 04 | சாட்டி மயானம் புனரமைப்பு | 1000-00 | 330-00 |

### சிறு விளம்பரம்

**G C.E O/L**

பரீட்சை மைய ஆங்கில இலக்கண இலக்கிய வகுப்புக்கள் Exam (oriented English Language Literature Classes) ஆரம்பம 2-11-2002பதிவுகள் 31-10-2002முதல் தொடர்பு கோ.சுப்பிரமணியம் 62 பழம் ரோட் கந்தர்மடம்.

(6154)

## இலகுகடன் அடிப்படையில் தையல் மெசின்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினரால் இலகுகடன் அடிப்படையில் மகளிருக்கான 12 தையல் இயந்திரங்கள் 2 ஆம் கட்டமாக அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

(9-ம் பக்கம் பார்க்க)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் நாளை மு.ப 9-00 மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் க- சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்- பல்கலைக்கழக கணனித்துறைத் தலைவர் சி- மகேசன் கலந்து கொள்ளவுள்ளார்-

நிகழ்வில் ஆசியுரையினை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும நிறுவுனர் நினைவுப் பேருரையினை யாழ்- பல்கலைக்கழக மருத்துவபீட உயிரியல் இரசாயனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பொ- நவரட்ணமும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ-10)

# கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்

இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளரும் யாழ்வலயக் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் 15.11 2002ஆந்திகதி மு.ப.10.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மு.ப 10 30 மணிக்கு திறக்கப்படும் அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கிகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கவும்.

| | பாடசாலை பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01. | யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி மாடிக் கட்டடம் கீழ்த் தளவேலை | 500 | 3600.00 |

1. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் நிறுவனத்தின் தரம்எம் 09க்குபதிவு செய்தவர்கள் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர் (ICTAD)
2. இவ்வேலைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப்பணத்தை யாழ்வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விபணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்து கேள்விப்பத்திரங்களை 05-11-2002 ஆந் திகதியிலிருந்து 11-11-2002ஆந்திகதி நண்பகல் 12-00மணிவரை யாழ் கல்வித்திணைக்கள பொறியியலாளரிடம் இருந்துபெற்றுக்கொள்ளலாம்-
3. கேள்விப்பத்திரங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர்முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்

| | | | |
|---|---|---|---|
| | ... புனரமைப்பு | ...00 | 220.00 |
| 02 | தாய், சேய், நலன்புரி நிலையப் புனரமைப்பு | 500-00 | 220-00 |
| 03 | நவலர்ச.சநிலைய பாலர் பாடசாலை புனரமைப்பு | 500-00 | 220-00 |
| 04 | சாட்டி மயானம் புனரமைப்பு | 1000-00 | 330-00 |

## நிபந்தனைகள்

1 கேள்விப்பத்திரங்கள் 6.11 02 திகதி தொடக்கம் 8.11.02 ம் திகதி நண்பகல் 12 00 மணிவரை எமது பிரதேச எல்லைக்குள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் எமது சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2 கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை கொடுப்பனவு அறிக்கை என்பவற்றினைத் தாமே தயாரிக்க வேண்டும்.

3 கேள்வி பத்திரங்களின் இரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வேலணை பிரதேச சபை, வேலணை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் 11.11 02 ம திகதி நண்பகல் 12.00 மணிக்கிடையில் அனுப்பி வைத்தல் வேண்டும் பதிவுத் தபாலில் இடுபவர்கள் இடதுபக்க மேல் மூலையில் வேலைவிபரம் எழுதுதல் வேண்டும்.

4, கேள்விகள் 11.11.02 ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்பபிததோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

5 4 ம் இலக்க வேலைக்கு இரும்பு ஒட்டு தொழிலில் அனுபவமும் தொழில் நுட்ப வளமும் கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் (இதற்கு மட்டும் பிரதேச எல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)

6 சகல வேலைகளும் 12.12.02 ம் திகதிக்கு முன்னர் செவ்வனே முடித்து சபையிடம் ஒப்படைத்தல வேண்டும்.

7 கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

8. மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ந.கருணாகரகுருமூர்த்தி (ஜே.பி. யு.எம்)
தலைவர்
வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபை,
வேலணை

(5205)

... பொறியியலாளரிடம் இருந்துபெற்றுக்கொள்ளலாம்-

3. கேள்விப்பத்திரங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர்முத்திரை என்பன இடப்பட்டுஅவற்றினையும்கேள்விப்பத்திரஇணைப்பிரதியினையும் தனித்தனி இருகடிதஉறைகளில் இடப்பட்டு கடிதஉறைகளின் இடதுமேற்பக்கத்தில் வேலையின்விபரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடிதஉறைகளில் போடப்பட்டு இருபிரதிகளையும் பிறிதொரு கடிதஉறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விஅலுவலகம்- செம்மணி வீதி யாழ்ப்பாணம் எனவிலாசமிடப்பட்டு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலஅறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் 15-11-2002 திகதி முற்பகல் 10.00மணிக்கு முன்னர் இடப்படவேண்டும்- மேலேகுறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எத்தகைய காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4, ஆவணங்கள் சரியாக நிரப்பப்படாத சரியாக இணைக்கப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிகவிபரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. தற்போது நடைமுறையில் இருக்கும்வற்(VAT)வரி முறை நடைமுறைப்படுத்தப்படும்.

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

பாடசாலைக் கட்டட வேலைப்பகுதி,
வலயக் கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

(கி-5204)

# அரசின் புனர்நிர்மாண நடவடிக்கைகளில்

# அம்பாறை மாவட்டம் புறந்தள்ளப்படுகிறது

## சம்பந்தப்பட்ட மக்கள் மனக்குமுறல்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேசங்கள் தொடர்பாகவும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என அம்பாறை மாவட்ட அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தற்போது அரசாங்கத்தினாலும், அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல புனர்நிர்மாண நடவடிக்கைகளும் வட பகுதியை மையமாக கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அம்மாவட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரு தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அம்பாறை மாவட்டமும் அடங்கும்.

போர் காரணமாக, சுமார் 919 குடும்பங்கள் இடம் பெயர்ந்து திருக்கோயில், தங்கவேலாயுதபுரம், காஞ்சிரங்குடா போன்ற பிரதேசங்களில் உள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதியான சூழலைத் தொடர்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு சென்று வாழ இவர்கள் விரும்புகின்றனர்.

தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு தேவையான அடிப்படைவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எவரும் இதுவரை முன்வரவில்லை.

இவர்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருட்களும் கடந்த 3 மாதகாலமாகஇடை நிறுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்குமுதலிவளவு வாலாம்பிகைஅம்பாள்தேவஸ்தானமண்டாபிஷேகப்பூர்த்தி விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-10)

## கூட்டம்

கடல் உணவுப்பொருட்களை தரைவழிப் பாதையூடாக கொழும்பிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை வடமாகாண கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் மேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பான கூட்டம் இன்று மு ப. 11 00மணிக்கு சமாச பணிமனையில் சமாசத் தலைவர் சி.தவரட்ணம்தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-23)

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவக

# நிலைமையை விளக்கி தலைமையகத்திற்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தை சொந்தக் காணியில்இயங்கவைக்கக் கோரி நேற்று முன்தினம் நிறுவக மாணவர்களினால் நடத்தப்பட்ட பேரணி முடிவில்அரசாங்க அதிபர் ஊடாக இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்திற்குமகஜர்ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகம், கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா, வணிகக் கல்வியில் தேசிய டிப்ளோமா, வணிக நிதியில் தேசிய டிப்ளோமாமற்றும்ஆங்கிலதேசிய டிப்ளோமாபயிற்சி நெறிகளை நடத்திக் கொண்டிருக்கிறது.

தற்போது, போதியகட்டட வசதியின்மையாலும் ஆளணிப் பற்றாக் குறையாலும் ஏனைய உயர் தொழில் நுட்ப நிறுவகங்களில் கற்பிக்கப்படுகின்ற சிலமுக்கியமானபயிற்சி நெறிகளை யாழ். தொழில் நுட்ப நிறுவகம் அறிமுகப்படுத்த முடியாமல் உள்ளது.

உயர் தொழில் நுட்பநிறுவகங்கள் 1996 ஆம் ஆண்டு உயர் கல்விஅமைச்சினால்உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பநிறுவகம் இரண்டு வருடங்கள் திருநெல்வேலி, முத்துத்தம்பி மகாவித்தியாலய வளவில் இயங்கியது.

1998 லிருந்து இந்தநிறுவகம் திருநெல்வேலியில் தனியாருக்குச் சொந்தமான வாடகை வீட்டில் இயங்குகிறது.

நிறுவகத்துக்குத் தேவையான கட்டடங்களை கட்டுவதற்காக காணி யொன்றைக் கொள்வனவு செய்யும்படி, கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் உயர் கல்விஅமைச்சரைப் பல முறைகேட்டுள்ளோம் இதுவரை எதுவிதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சகல வசதிகளுமுடைய பொருத்தமான காணி இல்லாத படியால், நிதி வழங்கும் அமைப்புகளிடமிருந்து நிதி உதவி பெற முடியாத நிலையில் உள்ளோம். 2002 ஆம் ஆண்டு தேவையானகட்டடங்களைக் கட்டுவதற்கு, காணி வாங்க பெருந்தொகைப் பணத்தை உலக வங்கி ஒதுக்கியிருந்தது.

நிறுவகம் காணியை தெரிவு செய்யாத காரணத்தால் நிதி வழங்கப்படவில்லை.

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கிடைக்காத மாணவர்கள் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெறுவதற்கும், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் தங்கள் தொழில் திறனை வளர்ப்பதற்கும்இந்த நிறுவனம் மாத்திரமேஇருப்பதால் உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்துக்கு அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

யுத்தத்தால் அழிந்துள்ள பிரதேசத்தில் இந்த ஒரு நிறுவகம் மாத்திரம் இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

ஆகவே, எங்களுடையஉண்மையானவேதனைகளை அனுதாபத்துடன் கவனித்துகாணியொன்றைக் கொள் முதல் செய்வதற்கோ அல்லது சுவீகரிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தால் நன்றியுடையவர்களாவோம் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. (உ-77)

# கல்வியியல்கல்லூரிகளில்பயிற்சிமுடித்தோர்

# ஒருமாத காலத்தில் பதவி ஏற்காவிடில் விலகியவர்களாக கணிக்கப்படுவர்

## கல்வியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய பயிற்சிகளை முடித்துக் கொண்டோர் ஒரு மாத காலத்துக்குள் தமது நியமனங்களை ஏற்கத்தவறும் பட்சத்தில், அவர்கள் அனைவரும் சேவையில் இருந்து விலகிச் சென்றவர்களாக கணிக்கப்படுவர்.

இவ்வாறு கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

அரசாங்க சேவை பொதுக் கொள்கைக்கு ஏற்பவே, இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த வருடம் இக்கல்லூரிகளில் அனுமதி பெற்று, பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களுள் 10 சதவீதமானோர் இன்னும் நியமனங்களை ஏற்க முன்வரவில்லை.

இதேவேளை, கல்வியியற்கல்லூரிகளுக்கு அனுமதிபெறும் போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப, இவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிச் செலவு தொகையான 35 ஆயிரம் ரூபாவை மீளப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## தொழிலில் ஈடுபட்ட மீனவர் கடலில் வீழ்ந்து காயம்

(மந்திகை)

தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் றோலரில் இருந்து தவறி விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வல்வெட்டித் துறையைச்சேர்ந்தகோ.பாலச்சந்திரன் (வயது 47) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-23)

# எயிட்ஸ் விழிப்புணர்வு வழிகாட்டல் ஆலோசனை

எயிட்ஸ் நோய் சம்பந்தமான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில், யுனிசெவ் அனுசரணையுடன் ரி. ஆர். ஆ. ஒ. நிறுவனத்தினால் நாளை மு. ப. 10. 30 மணிக்கு எயிட்ஸ் விழிப்புணர்வு சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.

ரி. ஆர் ஆர் ஒ கேட்போர் கூடத்தில் ஜி. சேரன்தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையை அருட்தந்தை சி. ஜி. ஜெயக்குமாரும், விளக்கவுரையை ஏ ஜே றொனால்டும்நிகழ்த்தவுள்ளனர். (உ)

## பனம்விதை நருகை

(சண்டிலிப்பாய்)

ஆனைக்கோட்டைஜே-138 கிராம அலுவலர் பிரிவில் மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சபையினால் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றது. (உ-258)

# கைதிகள் விடுதலைகோரி கையெழுத்து வேட்டை

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ்பெறுவதுடன் அரசியல் கைதிகள் மற்றும் தண்டனை பெற்ற கைதிகள் ஆகியோரை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கோரி மனிதஉரிமைகள் அபிவிருத்திக்கான நிலையம் மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளது.

5 ஆயிரம் கையெழுத்துக்களை திரட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிற்கும் அனுப்ப போவதாக மனித உரிமைகள் அபிவிருத்திக்கான நிலைய தலைவர் சட்டத்தரணி கந்தசாமி தெரிவித்துள்ளார்

இதேவேளைஇவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள்சட்டத்தரணிகள் கல்விமான்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற் சங்க வாதிகள் ஊடகவியலாளர்கள் கலைஞர்கள் அரசியற் கட்சித்தலைவர்கள் ஆகியோரின்கையெழுத்துக்களை திரட்டும் நடவடிக்கையிலேயே இவ் இயக்கம் ஈடுபட்டுவருகிறது. (உ-10)

# கமக்காரர் பாவனைக்கு கலப்பை வழங்கப்பட்டது

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் விவசாயிகள் சம்மேளனத்திற்கு, பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் கிருமிநாசினி, தெளிகருவி, கலப்பை ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி உபகரணங்கள், மீளக்குடியமர்ந்த விவசாயக் குடும்பங்களுக்கு சுழற்சிமுறையில் இலவசமாக பாவனைக்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் பட்டினிக்கெதிரான நிறுவன திட்ட உத்தியோகத்தர் பே. அருட்செல்வன் தலைமையில் நடைபெற்றது. (உ- 75)

# தேசியப் பாடசாலைகளில் மொழி ஆய்வுகூடம்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 32 தேசிய பாடசாலைகளில் மொழி ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

உலகவங்கியின் பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ், இதற்கென்று 40 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளர் எஸ். ஜி. கனகேத தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் தேசிய மொழிகளுடன் வெளிநாட்டு மொழிகளையும் கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (உ-8)

# திருமலையில் உள்ள சோதனைச் சாவடிகள் அகற்றப்பட மாட்டா

## சிஹல உறுமயவின் கோரிக்கைக்கு சாதகமான பதில்

(கொழும்பு)

திருகோணமலை நகரில் உள்ள 10 பொலிஸ் சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட மாட்டாதென உள் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சிஹல உறுமயவின் பிரதிச் செயலாளர் உதய ஹம்மந்திலவி, இப் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் காவலரண்களை எக் காரணம் கொண்டும் அகற்றுவதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது எனவும்,

இக் காவலரண் களேசிங்கள, தமிழ், முஸ்லிம்மக்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்றதுடன், கலவரங்கள் போன்ற சம்பவங்களை கட்டுப்படுத்த இவை அவசியமானவை எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; திருமலை நகரப் பகுதிக்குள் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் இடம் பெற இருப்பதாகவும்,

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் போன்று மீண்டும் இடம்பெறாது இருப்பதற்காக சமாதானக் குழுக்கள் இயங்கி வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## காவிரி நீர் விவகாரம்

# கர்நாடகாவில் வன்முறை வெடித்தது

# நிலைமையைக் கட்டுப்படுத்த ஊரடங்கு அமுல்

(பெங்களூர்)

தமிழகத்திற்குக் காவிரி நீரைத திறந்து விடுவதைக் கண்டித்து கர்நாடக மாநிலத்தின் மாண்டியப் பகுதியில் விவசாயிகள் நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

ஆயிரக்கணக்கான ஆர்பாட்டக் காரர்களைக் கலைக்க பொலிஸார் தடியடிப் பிரயோகம் நடத்தியதுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பயன்படுத்தினர்.

இதனால் ஆத்திரமுற்ற ஆர்ப்பாட்டக் காரர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் முக்கிய அரச அலுவலகங்களின் வாகனங்களுக்குத் தீ வைத்தனர்.

இதனையடுத்து அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட 15 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 3 இளைஞர்கள் காவிரி ஆற்றினுள் குதித்துத் தற் கொலை செய்ய முயன்ற போது, அங்கு நின்ற விவசாயிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து, மாண்டியா, பாண்டவபுரா, ஸ்ரீரங்கப்பட்டனா, மத்தூர்,கே.எம் தொட்டி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் முதல் ஊரடங்கு உத்தரவைப் பொலிஸார் பிறப்பித்துள்ளனர். (சு-4)

## ஐவரிக் கோஸ்டின் சமாதானத்திற்கு

# கிளர்ச்சியாளர்களால் தொடர்ந்தும் முட்டுக்கட்டை

(அபிர்ஜான்)

கிளர்ச்சியாளர்களின் ஆயுதக களைவு தொடர்பான பிரச்சினை மற்றும் அவர்களின் அரசியல் கோரிக்கைகளினால் ஐவரிக் கோஸ்டின் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அங்கு சமாதான முயற்சிகளை மேற் கொண்டு வரும்மேற்காபிரிக்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தை நடை பெற்றுக் கொண்டிருக்கையில் கடந்த செப்ரம்பர் மாதம் 19 ஆம் திகதி கிளர்ச்சியாளர்கள் மேற் கொண்ட சதிப் புரட்சியால் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டும், ஆயிரக் கணக்கானோர் இடம் பெயர்ந்துமுள்ள வேளையில், இங்கு மீண்டும் சமாதான முயற்சிகளில் மேற்காபிரிக்கத்வி தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-4)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் அல்ஜீரியாவில் 8 பேர் பலி

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவின் கிராமப் புறப் பகுதி ஒன்றில் முஸ்லிம் தீவிர வாதிகள் மேற்கொண்ட தாக்குத லில் 8 பொதுமக்கள் உயிரி ழந்துள்ளனர்.

ஒரு வார காலத்தில் இந்தப் பகுதியில் நடந்த இரண்டவது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

மேற்படி இரு சம்பவங்களிலும் 3 மாதக் குழந்தை உட்பட 21 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-4)

## நடிகர்களை ஒன்றிணைக்கும்

# மக்கள் இயக்கத்தை ஆரம்பிக்க ரஜனி தீர்மானம்

(சென்னை)

நடிகர்களை ஒன்றிணைக்கும் முகமாக மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடிகர் ரஜனிகாந் தீர்மானித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்துப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே ரஜனிகாந் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா உட்பட தென்மானில முதல்வர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு நடிகர் ரஜனிகாந் தயாராகி வருவதாகவும் தெரியவருகிறது. (சு-4)

# எட்னா எரிமலை குமுறும் அபாயம்

ஐரோப்பாவின் பெரும் எரிமலை யெனக் கருதப்படும் ''எட்னா'' மீண்டும் குமுறும் நிலையிலிருப்பதுடன் சிறிய அளவிலான பூமி அதிர்வுகள் சிவிலித் தீவின் கிழக்குப் பகுதியைத் தாக்கியுள்ளது.

இதனால் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த ஞயிற்றுக் கிழமை ''எட்னா'' எரிமலை குமுறியதையடுத்து அருகாமையில் இருந்த கிராமாங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வெளியேறியுள்ளமை தெரிந்ததே.

தற்போது எரிமலையின் வாய்ப பகுதியில் பலத்த புகையும், தீப் பொறிகளும் தென்படுவதாகவும், எந்நேரத்திலும் அது பெரிதாகக் குமுறலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (சு)

# வடகொரியா மீது கட்டுப்பாடுகள் விதிக்குமாறு புஷ்ஷிக்கு அழுத்தம்

(பியோங்யாங்)

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் தொடர்பாக அதன் மீது கட்டுப்பாடுகளையும் ஆட்சி மாற்றங்களையும் ஏற்படுத்துமாறும இது தொடர்பில் ஆராயுமாறும் அமெரிக்க செனட்டர்கள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிடம் வலியுறுத்தியுள்ளனர்.

வடகொரியா அணுவாயுதங்களை வைத்திருப்பதாக அண்மையில் அமெரிக்காவிடம் தெரிவித்ததையடுத்தே அதன் மீது பொருளாதாரத் தடைகளைப் போடுமாறும், இராஜதந்திர உறவுகளைத் துண்டிக்குமாறும் செனட்சபையைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன், அணுவாயுதத் திட்டத்தை நிறுத்தும் வகையில் வடகொரியா கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைப் பதவி நீக்குவது குறித்து ஆராய வேண்டும் என்றும் அதிபர் புஷ்ஷை அவர்கள் கோரியுள்ளனர். (சு-4)

# பாலித்தீவுக்குண்டு வெடிப்புடன் அல்கெய்தாவுக்கு தொடர்பு

## அவு. புலனாய்வுப் பிரிவு உறுதிப்படுத்துகை

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய பாலதத்தீவில் கடந்த மாதம் 12 ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் அல்கெய்தா அமைப்பிற்குத் தொடர் இருப்பதாக அவுஸ்ரேலியா வின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை உலக நாடுகள் பலஷம தீவிரப்படுத்தியுள்ள நிலையி லும் மற்றைய நாடுகளிலும் இது போன்ற தாக்குதல் இடம் பெறலாம் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

ஒஸாமா பின்லேடனுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் யமா இஸ்லாமா இயக்கத்திற்கு, இந்தோனேஷியாவின் பாலித்தீவுக் குண்டு வெடிப்புடன தொடர்பிருப்பதாகக கருதி அந்த இயக்கத்தைப் பயங கரவாதப் பட்டியலில் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்ரேலியா ஆகியன சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-4)

# இஸ்ரேல் அமைச்சர்கள் இருவர் வெளியேற்றம் ஷரோனின் கூட்டணி அரசு தளம்புகிறது

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் கூட்டணி அரசிலிருந்து தொழிற்கட்சி அமைச்சர்கள் இருவருர் நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர்.

இதனால் கூட்டணி அரசு பெருமபான்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இஸரேலிய வரவு செலவுத திட்டத்தில் யூதக் குடியேற்றங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை அடுத்தே கூட்டரசில் அங்கம் வகித்த தொழிற்கட்சியைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர் சிமோன் பெரசும், பாதுகாப்பு அமைச்சர் பெஞ்சமின் பென் எலைஸரும் வெளியேறியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஏரியல் ஷரோனின் பெரும்பான்மையுடன் வலதுசாரி அரசாங்கமொன்று அமையலாம் அல்லது பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெறலாம் என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதாயின், அடுத்த 90 நாட்களுக்குள் ஷரோன தேர்தலுக்கான அழைப்பை விடுக்கவேண்டும்.

அவ்வாறாயின் திட்டமிட்டதை விட 9 மாதங்களுக்கு முன்னர் தேர்தல நடத்த வேண்டியிருக்கும்.

120 ஆசனங்கள்ளைக் கொண்ட இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் பிரதமர் ஷரோனின் கட்சிக்கு தற்போது 55 ஆசனங்களே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-4)

## ஈராக் மீது தாக்குதல் நடத்த

# அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் தயார் நிலையில்

(வாஷிங்டன்)

ஈராக் மீது தாக்குத்தல் நடத்தக் கூடிய வகையில் பிரிட்டனிலும், யூகோஸ்லாவியாவிலும் வி-2 ரக குண்டு வீச்சு விமானங்களை நிறுத்த அமெரிக்கா தயாராகி வருகிறது.

ராடர் கருவிகளின் சக்திக்கு எட்டாத இந்த வகை யுத்த விமானங்கள் எரிபொருள் நிரப்பாமல் சுமார் 10 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரையில் பறக்கக் கூடிய வல்லமை வாய்ந்தன.

அத்துடன் 40 ஆயிரம் கிலோ எடை கொண்ட குண்டுகளை ஒரே தடவையில் எடுத்துச் செல்லக கூடிய சக்தியும் கொண்டன.

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலுக்கு இவ்விமானமே அதிகளவில் பயன்படுத்தக் கூடிய சாத்தியம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. (சு-4)





மாளிகாவத்தையில் கலவரம்
பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிசார் தீவிரம்

# இன்று ஒரு தகவல்

## தோலின் தன்மை அறிவீர்!

ஒரு பையன், எனக்கு மிகவும் வேண்டியவன். என்னுடன் படித்துக் கொண்டிருந்தான். நாங்கள் இருவரும் ஹோஸ்டலிலே ஒருஅறையிலிருந்தோம். தினமும் காலையில் அவன்தான் முன்பு எழுந்திருப்பான். எழுந்தவுடன்என்னிடம் கூடஒன்றும் பேசமாட்டான். வெகு தீவிரமாக யோசிக்க ஆரம்பிப்பான்'என்னடா யோசிக்கிறாய்?' என்று நான் கேட்பேன். அவன்வெகு நிதானமாகப் பதில்சொல்வான், 'இன்றைக்குக் குளிக்கலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்' என்பான் இப்படி அவன்யோசித்தநாட்கள்தான் அதிகம் குளித்த நாட்கள் குறைவு.

அவனுடன் ஒருமுறை குற்றாலத்துக்குப்போயிருந்தேன். அங்கும் அவன் இது மாதிரித் தான்யோசிக்க ஆரம்பித்தான் அவனை மெதுவாகத் தள்ளிக் கொண்டு போய் அருவியிலே நிற்க வைப்பதற்குள்ளே போதும், போதும் என்றுஆகி விட்டது. அப்போதும் எண்ணெய் தேய்த்துக் கொள்ள மாட்டேன் என்று விட்டான். சும்மா தான் குளித்தான்.

குற்றாலத்தில் இப்போது நல்ல பருவகாலம் என்றுபத்திரிகையில் பார்த்ததும் எனக்கு அவனது ஞாபகம் வந்து விட்டது. குற்றாலத்தில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல் அருவியில் நிற்பது அபூர்வம். சிலர் 'எண்ணெய்தேய்த்துக்கொள்வதனால்ஒன்றும்பயனில்லை. நமது தோல் எண்ணெயை உறிச்சுவதில்லை' என்பார்கள். அதுசரியில்லை. சமீபகாலத்தில் சில ஆராய்ச்சிகள் பண்ணி விட்டுத் தோலுக்கு உறிச்சும் சக்தி உண்டு என்று சொல்லிவிட்டார்கள்.

தோல் மூலமாக வைத்தியம் செய்து சிலநோய்களைத்தீர்க்கலாம் என்றுநமதுமுன்னோர்கள் முன்னரே இருந்துஅதைச் செய்து கொண்டு வருகிறார்கள். வாதநோய்க்குச் சிகிச்சை என்ன? சில தைலத்தைத் தயார் பண்ணித்தோலில் சூடு பறக்கத் தேய்ப்பது, ஒத்தடம் கொடுப்பது வேது பிடிப்பது, இதுபோன்றபுறச்சிகிச்சைகள் ஏற்கனவே சித்த வைத்தியத்தில் உண்டு, ஆனால் இந்தக் காலத்துப் பாடபுத்தகங்களில் தோல் ஒருநம்பகமான கவசம், அதன்மூலமாக எதுவும் உள்ளே போகமுடியாது, என்றுதான் நாம்படித்தோம். இப்பொழுது அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டியநேரம் வந்துவிட்டது.

பியாட்டர் ஸ்லைன்கோ என்றஒருரஷ்யநிபுணர்மனித உடலையும், மிருக உடலையும் மூடியிருக்கிற தோலைப்பற்றியெல்லாம்அவர்ஆராய்ந்தார். அதனுடைய உட்புகும் திறனை ஆராய்ச்சி பண்ணினார். குறிப்பிட்டசில சூழ்நிலைகளில் தோல்வழியாகப் பொருட்கள் உள்ளே போக முடியுமாம். சில சந்தர்ப்பங்களில் தோல், அதைச் சுற்றியிருக்கிற காற்று அல்லதுதிரவங்களிலேயிருந்து சில கரைசல்களை விரும்பி உறிஞ்சி உள்ளே இழுத்துக் கொள்ளுமாம்.

உதாரணமாக, அதிகமாக வியர்க்கிறசமயத்தில் தோலில் உள்ள துளைகள் பெரிதாகி விடுகின்றன. வியர்ப்பது நின்ற உடன் அவைகள் சுருங்கிப்பழைய நிலைமைக்கு வரக் கொஞ்சநேரம் ஆகும். அச்சமயத்தில் தோலின்மேல் நுண்ணிய துகள்- கரைசல் இப்படி ஏதாவது இருந்தால், வியர்வை நாளங்கள் அவற்றைத்தீவிரமாக உறிஞ்சி உள்ளே இழுத்துக் கொள்ளுமாம்.

ஒருவர் வெயிலில் நடந்து விட்டுவந்து வியர்க்க வியர்க்க வீட்டிற்குள் நுழைகிறார் ஈரத் துணியால் உடம்பைத்துடைக்கிறார். அப்போது என்ன ஆகும் தெரியுமா? துணியில் இருக்கிற ஈரத்தோடு அதிலேயுள்ள, அழுக்கு- கிருமி - எல்லாம் சேர்ந்து தோலுக்குள் போய்விடும். தோலுக்கு இருக்கின்ற இந்ததன்மையை மருத்துவ சிகிச்சை முறைகளில் பயன் படுத்தலாம்.

நீராவிக்குளிப்பு செய்து விட்டுவருகிற ஒருவரை ஒரு சிறிய அறைக்குள் உட்கார வைத்து, அதற்குள் மருந்து ஆவியைப் பரப்பினால்.. அது தோலுக்குள் புகுந்து உடம்பிலே பரவும்.

பால் சீரம்(MiLk Serum) உடம்புக்கு மிகவும் நல்லது. பாலிலிருந்து கொழுப்பு முழுவதையும் எடுத்து விட்டால், வே, (Whey) என்கின்ற திரவம் மிஞ்சும். அது தான் பால் சீரம், உடம்பை நன்றாக வியர்க்க வைத்து, அதன் பின்னர் இந்த பால் சீரக் கரைசலை உடல் முழுவதும் பூசினால், அதில் இருக்கிற சத்துக்கள் உள்ளே போய் விடும்.

மருத்துவப் பயனுள்ள களிமண்ணை உடம்பில் பூசுகிற ஒரு சிகிச்சை முறை மேல் நாடுகளில் உண்டு. இங்கும் இயற்கை வைத்தியத்தில் களிமண் குளிப்பு உண்டு, ஆனால் களிமண்ணால் மூடப்பட்ட தோல் வியர்த்தாற்றான். மண்ணில் இருக்கிற மருந்துச் சத்துக்கள் உடம்பினுள் பரவ முடியும். இதற்கு என்ன செய்யலாமென்றால், நோயாளியை நன்றாகக் குளிப்பாட்டி விட்டு, அதன் பின்னர் ஒரு சூடான அறையில் உட்கார வைத்துத் தாராளமாக வியர்க்கிற மாதிரிச் செய்யலாம். அதன் பின் உடம்பைத் துடைத்து விட்டு நீர்த்த களிமண் கரைசலை உடம்பில் பூசி விடலாம். இப்படிச் செய்தால் மண்ணில் இருக்கிற சத்து உடம்பினுள் போவது உறுதியாம்.

ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? மனிதன் தான் கடைசியில் மண்ணுக்குள்ளே போகிறான் என்றால், அதற்குமுன்னர்- மண்ணே மனிதனுக்குள் போய் விடும் போல் இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு சின்ன ஆலோசனை, கோபப்படாமல் கேட்பதென்றால் சொல்கிறேன். இனிமேல் எங்கேயாவது எருமை மாடு சேற்றிலே கிடந்தால், அதைப் பார்த்து விட்டு நீங்கள் ஒதுங்கிப் போகாதீர்கள். கிடுகிடு என்று நீங்களும் அதில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்து விடுங்கள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடக்கு- கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் அமெ. உதவி தொடரும்

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கம் வடக்கு - கிழக்கில் கண்ணிவெடிஅகற்றும்முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உதவி வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது எனகொழும்பிலுள்ளஅமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தூதரகம்விடுத்துள்ள அறிக்கையில்;

இப்பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை கண்ணிவெடி அகற்றும்பிரிவினருக்குஇதுதொடர்பாக மேலதிக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அமெரிக்காவின் அனுசரணையுடன் செயற்படும் கண்ணிவெடிஅகற்றும் குழுவினர் கடந்தவாரம்தமது பணிகளை பூர்த்தி செய்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் தமது பணிகளை ஆரம்பித்த இவர்கள் சரசாலைப்பகுதியில் ஒரு இலட்சத்து 23 ஆயிரம் சதுர அடிநிலப்பரப்பில்இருந்த 980 மிதிவெடிகளையும், 42 வெடி பொருட்களையும் மீட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டில் எமது இரண்டாம் கட்ட கண்ணிவெடி அகற்றும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி முதல் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் கொழும்பில் நடத்தப்படவுள்ளஇரண்டாவது உலக இந்து மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (உ)

## மாவீரரின் பெற்றோர்க்கு

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணத்தை தழுவிக் கொண்ட வடமராட்சி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களை வடமராட்சி அரசியல் துறை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-23)

## வளம்பேணும் மரங்கள் சேதம்

(சண்டிலிப்பாய்)

இயற்கை வளத்தைப் பேணும் பொருட்டு காக்கைதீவு தொடக்கம் கல்லுண்டாய் வரையான வீதி ஓரத்தில் நாட்டப்பட்டிருக்கும் கருவேலம் மரங்களின் கிளைகளை முறித்து சிலர் பொறுப்பற்ற தனமாக நடந்து வருவருதாக புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-258)

## அதிபர் சங்கப் பொதுக் கூட்டம்

(மந்திகை)

அகில இலங்கை அதிபர் சங்கத்தின் யாழ். மாவட்ட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கொழும்பில் உள்ள தாய்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து அதிபர்சங்க உறுப்பினர்களையும்கலந்து கொள்ளுமாறு மாவட்ட அதிபர் சங்கம் கேட்டுள்ளது. (உ-23)

## ஆன்மீகப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தீபாவளித் தினமான எதிர்வரும் 4ஆம் திகதி யாழ். பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் நாட்டில் அமைதியும் சாந்தியும்வேண்டி ஆன்மீகப் பிரார்த்தனை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணி முதல் ஓம் காரம், காயத்திரி ஜெயம், தியானம், பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியன இடம்பெறவுள்ளன. (உ)

## மாவீரர் வாரத்தில் பெற்றோர் கௌரவிப்பு

(மந்திகை)

மாவீரர் தின நிகழ்வு இம்முறை யாழ். குடாநாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை 7 தினங்கள் இம் மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தினத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவருகிறதுடன் இத்தினத்தில், விடுதலைப் போராட்டத்தில்வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இறுதி நாளன்று மாவீரர் துயிலும் இல்லங்களில் ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளனஇதன் பொருட்டு கோப்பாய், கொடிகாமம், வடமராட்சி மாவீரர் துயிலும்இல்லங்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆனந்தா வித்தியாலய அதிபராக வி. ஏ. சிவராசா நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## கிணறுகள் அமைப்பு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள கட்டுடை, நவாலி, காக்கைதீவு, மாதகல், சாந்தை ஆகிய கிராமங்களில் நிகொட் நிறுவனத்தினால் 15 கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. (உ-252)

## ஊவா மாகாண கல்வியாளர் குழு வடமராட்சி விஜயம்

(மந்திகை)

ஊவாமாகாணத்தில்இருந்து வருகை தந்திருந்த தமிழ், முஸ்லிம், சிங்கள கல்வியாளர்கள் குழு அண்மையில் வடமராட்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம் தலைமையில் வருகை தந்திருந்த இவர்கள், அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஆகியவற்றிற்கு சென்று பார்வையிட்டதுடன் மாணவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அதிபர் திருமதி சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் ஆசிரியர் சங்க யாழ் கிளைத் தலைவர் க கணேசமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு சென்ற இக் கல்வியாளர் குழு, பாடசாலையை சுற்றி பார்வையிட்டதோடு இப் பாடசாலை அதிபர் சேதுராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் யாழ். பாராளுமன்ற உறுப்பினர், மாவை சேனாதிராஜா, வலய கல்வி பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் ஆகியோர் உரையாற்றினர். (உ-23)

## வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனத்தில் முறைகேடு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் நியமனம் சேவை மூப்பு அடிப்படையில் இடம்பெறவில்லையாதலால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம் தாக்கல் செய்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சு செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மட்டத்தில் இலங்கை நிர்வாக சேவையில் ஆகக்கூடிய சேவை மூப்பு அனுபவம் உள்ள தன்னைபிரதமசெயலாளராக நியமனம் செய்யாது தன்னிலும் பார்க்க ஏழு ஆண்டுகள் சேவை மூப்புக்குறைந்த அதிகாரியை பிரதம செயலாளராக நியமித்ததன் மூலம் இலங்கை அரசமைப்பு பிரிவு 126ன் கீழ் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும்,

முன்னையநியமனத்தை ரத்துச் செய்து சேவை மூப்புள்ள தன்னையே பிரதம செயலாளராக நியமனம் செய்ய வேண்டும் என்றும் அம்மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கின் பிரதிவாதிகளாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தனா தற்போதைய பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜன் உட்பட பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம)

## வெள்ள நீர் தேக்கம் தொற்று நோய் அபாயம்

(சண்டிலிப்பாய்)

சாவல்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வெள்ள நீர் தேங்கிநிற்பதால் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் மிகவும் சிரமமுற்று வருகின்றனர்.

இப் பகுதி வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்ற வெள்ள வாய்க்கால் இல்லாமையே இதற்குக் காரணம் எனவும்,

வெள்ள நீர் தொடர்ந்தும் தேங்கி நிற்பதால் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-258)

# அரசுக்கு ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்குவதையே ஜனாதிபதி விரும்புகிறார்

## செய்தியாளர் மாநாட்டில் ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தை வெற்றிபெற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வாழ்த்துத்தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

ஹரீம் பீரிஸ் மேலும் கூறுகையில்;

பிரதான அரசியல் தீர்வுப் பிரச்சினைகள் குறித்து தாமதமின்றி பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி விரும்புகிறார்.

இணக்கப்பாட்டு அரசென்றை நடத்த ஜனாதிபதி எந் நேரமும் ஆயத்தமாகவும் அர்ப்பணிப்புடனும் இருக்கிறார்.

அரசின் நடவடிக்கைக்கு இடையூறு இன்றி அதே வேளை அரசுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஆதரவு வழங்குவதையே ஜனாதிபதி விரும்புவதாகவும் சுட்டிக்காட்டினார்;

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்;

அரசு–புலிகள் பேச்சுவார்த்தைக்கு தனது பிரதிநிதி ஒருவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையை அரசு தட்டிக் கழித்து வருகின்றது.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைக்குறைக்கும் ஓர் நோக்கமாக கூட்டுப் படைகள் செயலகம் ஒன்றை அமைக்க அரசு திட்டம் தயாரித்துள்ளது.

இது விடயம் ஜனாதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தனது கருத்தை அவர்இரண்டுவாரங்களுக்குள் வெளியிடுவார்;

அரசின் இந்த நடவடிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைவானதா என்பதை அரசு கவனத்தில் கொள்வதுடன், இது போன்ற நடவடிக்கைகள் அரசியல் சகவாழ்வு உறவைப் பாதிக்கும் என்பதையும் உணர வேண்டும் என்று தெரிவித்தார். (உ)

### கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி திருவிழா எதிர் வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இக் காலங்களில் தினமும் கந்தபுராணப் படிப்பும் நடைபெறவுள்ளது. (உ)

### ஊனமுற்றோர் குழுத் தெரிவு

(சுதுமலை)

யாழ் மாவட்டத்தில் போர்ச் சூழலால் ஊனமுற்றவர்களுக்கான சமுதாய மட்டத்திலான குழுத்தெரிவு, பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெறவுள்ளது.

இக்குழுக்கள் ஊடாக பிரதேச செயலர் மூலம் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (உ- 252)

### அடுத்த ஆண்டில் நாடு முழுவதிலுமுள்ள 575 பாடசாலைகள் புனரமைப்பு

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 575 பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக கல்வி, கலாசார மனிதவள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில் பண்டாரவளை தர்மபால வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை அதிபர்களிற்கான 9 வது மநாட்டிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

விஞ்ஞானம், தொழில் நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலேயே இப் புனரமைப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதன் மூலம் பிரபல பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் ஆளணி மற்றும் வள நெருக்கடிகளை குறைக்க முடியும்.

தற்போது சுமார் 1 லட்சத்து 95 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிகின்ற போதும் ஆங்கில ஆசிரியர்களாக 23 ஆயிரம் பேர் மாத்திரமே கடமையாற்றுகிறார்கள்.

இவைதவிர இவ் ஆங்கில ஆசிரியர்களிடம் ஆங்கில மொழி மூலம் ஏனைய பாடங்களைப் போதிக்கும் ஆற்றல் மிகக் குறைவாகவே உள்ளது.

எனவே, இவர்களிற்கு ஆரம்பப் பயிற்சி அளிக்கும் நடவடிக்கை 254 பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, 450 அதிபர்களை கல்வி சம்பந்தமான முயற்சிகளிற்காக வெளிநாடுகளிற்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (உ-10)

### ஒய்வூதிய திணைக்களத்திற்கெதிராக மனித உரிமை மீறல் மனு

(கொழும்பு)

ஒய்வூதிய திணைக்களத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல்மனுஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்ற வருடம் யூலை மாதம் ஓய்வுபெற்ற போதும் இதுவரைதனக்கு கொடுப்பனவு ஏதுவும் வழங்கவில்லை எனக்கூறி ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பொறியியலாளர் சி மனோகரன் இந்தஅடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார். (உ-10)

### பட்டினிக்கு எதிரானநிறுவனம் மீளக் குடியமர்ந்தோர்க்கு பயன்மிகு உதவிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் கிராம அலுவலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 39 குடும்பங்களுக்கு அண்மையில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால்வீட்டுவளவுதுப்புரவாக்கும் கருவிகள் வழங்கப்பட்டன

இவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பயனாளிகளுக்கு விதை வெங்காயம் மற்றும் இருவருக்கு விதை நெல் என்பனவும் வழங்கப்பட்டன.

இதேவேளை, இவ்வாறான உதவிகளை ஏற்கனவே 107 பேர் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

### தீவகத்தில் பரவலாக பனை விதை நடுகை

(ஊர்காவற்றுறை)

பனை அபிவிருத்திச் சபையினால் எழுவைதீவு அனலைதீவு ஆகிய இடங்களில் பனம் விதை நடுகை செய்யப்படவுள்ளது.

மேற்படிதீவுகள் ஒவ்வொன்றிலும் தலா 5 ஆயிரம் பனம் விதை நடுகை செய்துள்ளது.

ஏற்கனவே பனைஅபிவிருத்திச் சபை ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்துடன் இணைந்து மெலிஞ்சிமுனைதம்பாட்டிஆகிய இடங்களில் பனம்விதை நடுகை செய்யப்பட்டுள்ளது. (உ-75)

### நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

பருத்தியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் அண்மையில் பருத்தியடைப்பு கதிரேசன் பாடசாலையில் இடம்பெற்றது.

மேற்படி பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றபோது, தலைவராக இ. இராமேஸ்வரன், செயலாளராக கே. கோபாலசிங்கம், பொருளாளராக எஸ். லிங்கேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர் 7 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

### கூட்டுச் செயலணியை எதிர்த்து இனவாதக் கட்சிகள் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசு–புலிகள் கூட்டுச் செயலணிக்குழுவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க கட்சிகள் சில தயாராகி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகியன இக்குழு அமைவதனைஎதிர்ப்பதுடன், இதன் மூலம்உத்தியோகபூர்வமாகதனிநாட்டை புலிகளுக்கு அரசு தாரைவார்க்கவுள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர்விமல்வீரவன்ச குற்றம் சாட்டி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

### 306 பி மாவட்ட ஆளுநர் லயன் ஓ. றேகன் பிஞ்சி சாவகச்சேரி விஜயம்

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி மாவட்டத்தின் ஆளுநர் லயன் ஓ. றேகன் பிஞ்சி அண்மையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சாவகச்சேரிக்கு விஜயம் செய்தார்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த மட்டுவில் மகா வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு லயன்ஸ் கழக உறுப்பினர்களுடன் விஜயம் செய்து,

இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தளபாட வசதிகள் இல்லாத நிலையில் தரையில் இருந்து பயில்வதைப் பார்வையிட்டார்.

தமது விஜயத்தினை முன்னிட்டு இம்மூன்று பாடசாலைகளிலும் தென்னங் கன்றுகளை நாட்டி வைத்ததுடன் சில வறிய மாணவர்களின் கல்விக்குநிதிஉதவியும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

### சலுசலவிற்கு மேலும் 91 மில்லியன் ஒதுக்கு

(கொழும்பு)

சலுசலவின் புனர்நிர்மாணப் பணிகளுக்கென மேலும் 91 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதன் கீழ், சலுசலவின் ஒய்வூதியத் திட்டத்திற்கு திறைசேரியால் வழங்கப்படவிருந்த 159 மில்லியன் ரூபா 250 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன்,

ஒய்வூதியத் திட்டத்திற்கு 250 மில்லியன் வழங்கப்படவுள்ளது. (உ)

### இன்று விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழிற்றுறைத் திணைக்கள தலைமையகத்தில் இன்று விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் சிரேஷ்ட மேற்பார்வையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறுயாழ். மாவட்ட முகாமைத்துவ உதவியாளர் ப. ராகவன் கேட்டுள்ளார். (இ-5)

### ஒரு இலட்சம் ஏக்கரில் இறப்பர் செய்கை

(கொழும்பு)

மொனறாகலை மாவட்டத்தில் சுமார் ஒருலட்சம் ஏக்கரில் புதிதாக இறப்பர்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதொடர்பான நடவடிக்கையை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களமும் மேற்கொண்டு வருகின்றது. (உ-10)

## ஆயுதக் கொள்வனவு ஊழல் குற்றப் புலன் விசாரணைத் திணைக்களம் விசாரணை நடத்தும்

(கொழும்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகச் சந்தேகிக்கப்படும் முறைகேடான ஆயுதக் கொள்வனவுகளை விசாரிப்பதற்கெனநியமிக்கப்பட்ட மூவர் குழு, 1998 ஆம் ஆண்டின் சிம்பாவே ஆயுதபேரம் பற்றி விசாரணை செய்யுமாறு குற்றப்புலன் விசாரணைத் திணைக்களத்தைக் கேட்டுள்ளது.

இக் கொள்வனவில்எம் ஐ.ம 24 உலங்குவானூர்தி ஆறுதி சீ-130 ரகஹேர் கூலிஸ் ரக விமானம்-ஒன்று மற்றும் 80 மி மீ, 120 மி.மீ.மோட்டார்கள் என்பன இடம் பெற்றிருந்தன.

இலங்கைஅரசாங்கத்திற்கும் சிம்பாவே அரசாங்கத்திற்குமிடையே செய்யப்பட்ட மேற்படி கொடுக்கல் வாங்கலில் பெருமளவு குறைபாடுகள் விசாரணைக் குழுவினால் அவதானிக்கப்பட்டுளளன.

கொடுப்பனவு 80 சதவீதம் செய்யப்பட்டிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் 90 சதவீதமானவை நாட்டிற்குள் கொண்டு வரப்படவில்லை என்று விசாரணைக்குழுவின்தலைவர் துலிந்தவீர சூரிய தெரிவித்துள்ளார்.

கொள்வனவின் பத்து சதவீதமான மேட்டார் குண்டுகள் மட்டுமே விமானம்மூலம் கொண்டு வரப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## 2003ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

## (பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைகுட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2003 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2002.11.21 ஆம் திகதி ந.ப. 12. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசபையின் அந்தந்த உப அலுவலங்களில் உரிய கேள்வி வைப்புப்பணம்,கேள்விப்படிவப்பணத்துடன் வற் வரியும் சேர்த்து செலுத்துவதின் பேரில் 2002.11.20ந் திகதி பி.ப.2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை மூன்று பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியுடன் இரு பிரதிகளையும் ''தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்'' என்ற முகவரிக்குக் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 2002.11.21 ந் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். மற்றைய பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம்,யாழ்ப்பாணம்'' என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 2002.11.21 ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ பிரதிநிதியோ சமுகம் அளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் அடையாள அட்டை தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

தனியார் காணிகளில் இறைச்சிக்கடைகள் நடத்துவதற்கு கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் பெற்று கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.இல்லையேல் குறித்த கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையின் அந்தந்த உப அலுவலகங்களில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்காவிடில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள்,விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னதாக தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்க தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது எனவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகையிலும் பார்க்க குறைவான தொகை குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

சந்தையினைக்குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியில் 3 %இற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம்முண்டு.

தற்பொழுது குத்தகைவாடகை நிலுவைப்பணம் செலுத்த வேண்டிவரும் ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்கள் ஆவார்கள்.மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்திலும், மற்றைய உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகையின் விபரம் | மாதவாடகை | கேள்விப்பத்திரப்பணம் | கேள்விவைப்புப்பணம் | ஆகக் குறைந்த மதிப்பீட்டுத்தொகை வற் வரி நீங்கலாக |
|---|---|---|---|---|
| 01) மானிப்பாய் பட்டினம் | | | | |
| 1. மானிப்பாய் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 2000/ - | 400,000/ - |
| 2. மாட்டிறைச்சிக்கடை (சந்தை) | 400/ - | 300/ - | 1500/ - | 150,000/ - |
| 3. ஆட்டிறைச்சிக்கடை | 300/ - | 300/ - | 1500/ - | 70,000/ - |
| 02) மானிப்பாய் கிராமம் | | | | |
| 1. காக்கைதீவு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 20,000/ - |
| 2. நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 100,000/ - |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 75,000/ - |
| 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 400/ - | 300/ - | 1500/ - | 50,000/ - |
| 5. ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக்கடை | - | 300/ - | 2000/ - | 200,000/ - |
| 6. ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை | - | 300/ - | 1500/ - | 25,000/ - |
| 03) பண்டத்தரிப்பு பட்டினம் | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 150,000/ - |
| 2. மாட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/ - | 300/ - | 1500/ - | 30,000/ - |
| 3. ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/ - | 300/ - | 1500/ - | 7,000/ - |
| 4. கருவாட்டுக்கடை இல.01 | 250/ - | 300/ - | 1500/ - | 7,000/ - |
| 5. கருவாட்டுக்கடை .இல. 02 | 250/ - | 300/ - | 1500/ - | 7,000/ - |
| 04) பண்டத்தரிப்பு கிராமம் | | | | |
| 1. மாசியப்பிட்டி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 75,000/ - |
| 2. இளவாலை பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/ - | 1500/ - | 60,000/ - |
| 3. மாதகல் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உடபட) | - | 300/ - | 1500/ - | 20,000/ - |
| 4. மாசிப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/ - | 300/ - | 1500/ - | 15,000/ - |
| 5. இளவாலைச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | - | 300/ - | 1500/ - | 15,000/ - |
| 6. மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/ - | 300/ - | 1500/ - | 7,000/ - |
| 7. மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250/ - | 300/ - | 1500/ - | 15,000/ - |

முக்கிய குறிப்பு :- தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு புறம்பாக தொகையில் 20% வற் வரியாக செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் கேள்விப்பத்திரத்தில் காட்டப்படுதல் வேண்டும்.

வலி . தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்
30. 10.2002.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜே. பி. யு,. எம்.)
தலைவர்,
வலி . தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி 5197)

# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை- நீர்வேலி வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் அட்டவணை 1. இல் 6, 7, 8 ம் வேலைகளுக்கு இக்ராட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகிறது. கீழ்க்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விக் கட்டணத்தையும் செலுத்தி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 06.11.2002-14.11.2002 வரை
2. கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 15.11.2002 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி 15.11.2002 பி.ப. 2.00 மணி வரை (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ அல்லது மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
5. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''தவிசாளர் வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி'' என்ற முகவரிக்கும்; இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கவும்.

### அட்டவணை 1

| இல | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | வற் 20 % |
|---|---|---|---|---|
| 1 | ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா ச.ச நிலைய கட்டட திருத்தம் | 500.00 | 200.00 | 40.00 |
| 2. | புத்தூர் சர்வோதயா ச.ச. நிலைய கட்டட திருத்தம் | 500.00 | 200.00 | 40.00 |
| 3. | அச்சுவேலி தெற்கு விஷ்ணு ச.ச. நிலைய கட்டட திருத்தம் | 500.00 | 200.00 | 40.00 |
| 4. | லிங்கன் மத்தி ச.ச. நிலைய கிணறு திருத்தமும் மலசலகூடம் அமைத்தலும் | 500.00 | 200.00 | 40.00 |
| 5. | ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலை கட்டட திருத்தம் | 2000.00 | 500.00 | 100.00 |
| 6. | அச்சுவேலி உலவிக்குளப்பிள்ளையார் கோவில் மதகு புனரமைப்பு | 1250.00 | 500.00 | 100.00 |
| 7. | புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதி மதகு புனரமைப்பு | 1250.00 | 500.00 | 100.00 |
| 8. | இருபாலை கொல்களம் திருத்த வேலை | 250.00 | 250.00 | 50.00 |
| 9. | சபையின் ஆட்டோ வாகனம் பார்வையிட்டு திருத்துதல் (கூறுவிலை) | — | 100.00 | 20.00 |
| 10 | சபையின் இருசக்கர உழவு யந்திர பெட்டி பார்வையிட்டு திருத்துதல் (கூறுவிலை) | — | 100.00 | 20.00 |

### அட்டவணை 2 தளபாடங்களுக்கான கூறுவிலை

| இல | வேலை விபரம் | வைப்புப் பணம் | கூறுவிலைப் பத்திரப் பணம் | வற் 20% |
|---|---|---|---|---|
| 1. | ஆவரங்கால் கிழக்கு லிங்கன் முன்பள்ளி பாலர் பாடசாலைக்குத் தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 2. | அச்சுவேலி யாழ். மாவட்ட தென்னிந்திய தேவாலய பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500 00 | 100.00 | 20.00 |
| 3. | பத்தைமேனி விநாயகர் பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 4 | ஆவரங்கால் விவேகானந்தா இந்து முன்பள்ளிக்கு தளபாடம் செய்து தருவித்கல். | 500.00 | 100.00 | 20.00 |
| 5. | நீர்வேலி காமாட்சி அம்மன் பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 6. | வாதரவத்தை பாலர் பாடசாலை ச.ச. நிலயத்திற்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 7 | புத்தூர் கிழக்கு குருநாதர் முன்பள்ளிக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 8 | புத்தூர் கிழக்கு ராஜன் முன்பள்ளிக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 9 | புத்தூர் அறிவொளி ச. ச. நிலைய பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 10 | புத்தூர் கலைமகள் ச.ச. நிலைய பாலர் பாடசாலக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 11. | ஆவரங்கால் கலையகம் பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்துதருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 12. | தம்பாலை ஸ்ரீமுருகன் பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்கல். | 500.00 | 100.00 | 20.00 |
| 13 | நீர்வேலி ஸ்ரீகணேசா பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவிந்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 14. | இருபாலை அன்னை இந்திரா காந்தி பாலர் பாடசாலைக்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |
| 15 | அச்சுவேலி வளலாய் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் செய்து தருவித்தல். | 500.00 | 100.00 | 20.00 |

சித்திபெற்ற கேள்விக்காரர் மேற்படி அட்டவணை 1, 11 இலுள்ள வேலைகளை 25-12-2002 ம் திகதிக்கு முன் நிறைவேற்றி ஒப்படைக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

செ குகதாசன்
செயலாளர்.

பூ குணசிங்கம்
தவிசாளர்.

(C-5200)

வர்த்தகர்- பாவனையாளர்

## அதிகாரசபை சட்டமூலம் விரைவில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வர்த்தக பாவனையாளர் விவகாரம் தொடர்பான அதிகார சபை ஒன்றை அமைக்கும் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தற்போது செயற்பட்டு வரும் நியாயவர்த்தக ஆணைக்குழு, உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திணைக்களம் என்பவற்றை இணைத்தே இவ் அதிகார சபை அமைக்கப்படவுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு செயற்படவுள்ள இவ் அதிகார சபையில் நிர்வாகப் பொறுப்புக்கென பணிப்பாளர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

பாவனையாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும், பாவனையாளர் சட்டங்களை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்குடனும் இவ் அதிகாரசபை அமைக்கப்படவுள்ளது. (உ-8)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பொலிஸ் அதிகாரிகளின் சலுகைகள் குறைப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் தாம் கடமையில் ஈடுபடும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை பொலிஸ்மா அதிபரின் கவனத்தில் கொண்டுவந்துள்ளனர்.

இவ் ஆணைக்குழுவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரிகள் 90 பேர் ஒன்றிணைந்து இது விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு 70 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக குறைக்கப்பட்டமை, விசாரணைகளுக்காக செல்வோருக்கு வழங்கப்படும் வாகன வசதிகள் குறைக்கப்பட்டமை,

தொலைபேசி அழைப்புகளை பெறுவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை ஆகியன குறித்து பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது போன்ற பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணுமாறும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ்மா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-8)

## அரிசிக்கான இறக்குமதி தீர்வை 2ரூபாவால்குறைப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அரிசிக்கான இறக்குமதித் தீர்வையை கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாவால் குறைத்துள்ளது.

இவ்வாறுபிரதமரின் அபிவிருத்திஆலோசகர் கே.ஜே. விஜயதாஸதெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் அரிசி மீதான இறக்குமதித் தீர்வை 7 ரூபாவாக இருந்தது.

அரிசிக்கான இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டதை அடுத்து உள்ளூர் சந்தைகளில் அரிசி விலையில் வீழ்ச்சி ஏற்படும் என வர்த்தகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## திருநெல்வேலி வட்ட, லயன்ஸ் கழக ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் எதிர் வரும் 3 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இலவச கண் சிகிக்சை முகாமொன்றை நடாத்தவுள்ளது.

இதில், பிரபல கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாஸ், விழி வெண்படலக் குறைபாடு காரணமாக பார்வை பாதிக்கப்பட்டவர்களை பரிசோதிக்கவுள்ளார்.

இக் கண் சிகிச்சை முகாமின் போது அடையாளம் காணப்படும் நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை மூலம் பார்வை பெற்றுக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (உ)

## காலத்தின் பதிவுகள்

### நேற்று ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

தமிழீழப் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் காலத்தின்பதிவுகள்புகைப்படக்கண்காட்சி நேற்று காலை 9.00 மணிக்கு தீவக கோட்ட அரசியல் துறையின் ஏற்பாட்டில் ஆரம்பமானது.

இக்கண்காட்சியை தீவக கோட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருந்தவம் ஆரம்பித்துவைத்தார்.

தேசியக் கொடியை ஊர்காவற்றுறை கோட்டப் பொறுப்பாளர் ரதன் ஏற்றி வைத்தார்.

பொது ஈகச் சுடரை ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே. ரத்தினசிங்கம், ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர்கு: கணேசலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது. (உ-75)

## திடீர் பரிசோதனை

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபைக்கு உட்பட்ட மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில்உள்ள மானிப்பாய் பட்டினம், மற்றும் கட்டுடைப் பகுதியில் அமைந்துள்ள தேநீர்சாலைகள், உணவு விடுதிகள்மற்றும் பேக்கறிகள் என்பன கடந்த புதன்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களதுதிடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டது. (உ-252)

## கிணறுகள் புனரமைப்பு

(சண்டிலிப்பாய்)

ஆனைக்கோட்டைப் பகுதியில்.3 பொதுக் கிணறுகளை சர்வோதய நிறுவனம் புனரமைத்துள்ளது. (உ-258)

நல்லினத்தி னூங்குத் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்

குறள்

# வலம்புரி

## மாளிகாவத்தை கலவரம்

சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான ஆரவாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மாளிகாவத்தையில் சிங்கள - முஸ்லிம்களிடையே கலவரம் ஏற்பட்டுள்ளது. கலவரத்திற்கான காரணம் என்ன என்பது ஒருபுறமிருக்க சர்வதேசத்தின் பார்வை முழுவதும் இலங்கையை நோக்கித் திரும்பியுள்ள நிலையில் தலைநகரில் சிங்கள முஸ்லிம்களிடையே ஏற்பட்டுள்ள கலவரம் சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதென்பதை உணர்ந்துகொள்ள முடியும்.


மூவின மக்கள் கூடி வாழும் இலங்கைத் தீவில் ஓர் இனமே ஆட்சிக்குரியது. பெரும்பான்மை பலம் நாமே என்ற இறுமாப்பே இலங்கையில் சிங்கள- தமிழ், சிங்கள- முஸ்லிம், தமிழ்- முஸ்லிம் இனக்கலவரம் ஏற்படுவதற்குக் காரணமாகவுள்ளது.

எல்லா இனங்களுக்கும் இந்நாடு உரியது.இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் ஆளும்உரிமை உண்டு என்ற சமவுடமை சிந்தனை என்று மேலோங்கி நிற்கிறதோ அன்றுதான் இலங்கைத் தீவில் 'இனக்கலவரம்' என்ற'தொடர் சோகம்' முற்றுப்பெறும். இலங்கையைப் பொறுத்தவரை காலத்துக்குக்காலம் இனக்கலவரங்கள் ஏதோவொரு வடிவில் உருவெடுத்துக்கொண்டே இருக்கிறது. இவ் இனக்கலவரம் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே ஏற்பட்டாலும் இறுதிமுடிவும், பாதிப்பும் தமிழர்களின் தலையிலேயே பொறிவதாகவுள்ளது.

இத்தகைய நிலைமை மாற வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் தீர்வு காண்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

நவீன உலகில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சிகண்டுவரும் இவ்வேளையில் இனக்கலவரங்களும், தீவைப்புகளும், கொலைகளும் கொள்ளைகளும் ஒருநாட்டில் நடைபெறுவதாயின் அது அந்நாட்டின் பொருளாதாரத்தில்தாக்கத்தை ஏற்படுத்துமென்பது மட்டுமின்றி சர்வதேச ரீதியில் ஓர் குறைப்பு மதிப்போடு நோக்கப்படுகின்ற நாடாகவும் இனத்துவம் பேணப்படாத கீழ்நிலைப் போக்குடைய நாடாகவும் இருக்கும்.

# உள்ளத்தை உருக்கிடும் சொற்றொடர்களால் இறை இன்பத்தில் திளைக்கவைத்த திருவாசகம்



## வெள்ளி நற்சிந்தனை

திருவாசகம் தேன், அது பூவில் சிந்தும்,நாவை இனிக்க வைக்கும் தேன் அல்ல. சிவமணத்தில் பூத்த உயிரை இனிக்கச் செய்யும் பொருள் தேன் பூத்தேன் நாவின் நனைந்து கொண்டு இருக்கும் போது இனிக்கும் திருவாசகம் என்னும் பொருள் தேன் அப்படி அல்ல திருவாசகத்தைச் சிந்திக்கின்ற வேளையில் எல்லாம் சிந்தனையை வந்துருக்கும் பந்தனையை விண்டு அறுக்கும் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த வெள்ளத்தில் அழுத்தும்:

### கசிந்துருக வைப்பது

அவ்வாறன திருவாசகத்தை மணிவாசகர், காட்டாதன வெல்லாம் காட்டிக் கேளாதன எல்லாம் கேட்பித்துச், சிவம் காட்டி தாள் தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டிய சிவபெருமான் கேட்சப் பாடினார். ஏடும் எழுத்தாணியும் பற்றிய திருக்கரத்தினராக மறைபொருளான அந்தப் பராபரப் பொருள் ஒளி செய்யு மானுடமாக வந்து வரைந்தார். அந்நிசழ்ச்சி கல்லா நெஞ்சத்துக் கடைப்பட்டவர்களையும் கசிந்துருகவைக்கும் அன்றோ.

### சொற்றொடர்கள்

திருவாசகத்தில் பயின்று வரும் பெரும்பாலான சொற்றொடர்கள் அன்றாடம் நமது நடைமுறை வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை வெளிப்படுத்தும் உணர்வு பூர்வமானவையாக விளங்குவன ஈண்டு இன்புறத்தக்கவை; அவற்றுள் ஒரு சில சொற்றொடர்களை இங்கு குறிப்பிடலாம்:

1. என்னை நீ செய்த நாடகம், 2. நடிப்பு, 3.பேயனேன் 4. நாய்க்குத் தவிசிட்டு, 5. காட்டாதன எல்லாம் காட்டி, கேளாதன எல்லாம் கேட்பித்து. 6. உண்டு உடுத்துஇங்குஇருப்பதானேன். 7. கல்லாமனத்துக் கசியாதேன். 8 கீறு இலாத நெஞ்சு உடையன் ஆயினேன். 9. எனைப் புகுத விட்டு நீ போவதோ சொலாய்பொருத்தம் ஆவதே- 10 பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள்தம் பொய்யினையே, 11. நின்னைச் சிரிப்பிப்பன். 12. என்னால் அறியாப் பதம் தந்தாய். யானது அறியாதே கெட்டேன். உன்னால் ஒன்றும் குறைவில்லை. 13. தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை. 14 கெடுவேன் கெடுமா கெடுகின்றேன், கேடிலாதாய் பழிகொண்டாய். படுவேன் படுவதெல்லாம் நான் பட்டாற் பின்னைப் பயன் என்னே. 15இன்பமே என்னுடை அன்பே, 16. தாயே ஆகி வளர்த்தனை. 17. நாத் தழும்பு ஏற. 18. சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல காலும் வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

### நடைமுறையில்பயிலப்படுவன

இச் சொற்றொடர்கள் எல்லாம் அன்றாடம் நடைமுறை வாழ்க்கையில் அழுத்தமாகப் பயிலப்படுவன. தாய் சேய், கணவன், மனைவி, அண்ணன், தங்கை, காதலி- காதலன்- நட்பு. மேலதிகாரி- தொழில் செய்வோர்— என்ற பலவகையான உறவுமுறை இணைப்பு உள்ளவர்களுடைய ஆசாபாச உணர்வுப் பரிமாறலின் போது பயிலப்படுவன. அச்சொற்றொடர்கள் கையாளப்படாவிடினும் சொற்றொடர்கள் வெளிப்படுத்தும் பொருள் வெளிப்பாடு வெள்ளிடை மலை.

மானிட வாழ்க்கை உணர்வுப்பகிர்வுகளை எல்லாம் இறை உணர்வாக மாற்ற மணிவாசகர் நமக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டிய உயர்நெறி அது. சோலைப் பசுங்கிளியையும் காலைப் பூங்குயிலினையும், தும்பியையும் கூவி அழைத்துச் சிவபெருமானை கூவுங்கள், பாடுங்கள்- என்று தெய்வத் தமிழ் ஓதிய பெருந்தகையார், மானுட உணர்வுகளை வீணே அலைமோத விட்டு வேடிக்கை பார்க்க விரும்புவாரா? அதனால்தான் எத்தகைய உணர்வுத் துடிப்புகளாக இருந்தாலும் அவற்றை எல்லாம் சிவானுப உணர்வில் சேர்க்க நமக்கு இனிய சொற்றொடர்கள் காட்டி வழிப்படுத்தினர்.

**சிவ. சண்முகவடிவேல்**

# மக்களை தவறான 'வழியில் நடத்த தீய சக்திகள் சில முயல்கின்றன

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை விரும்பாத தீய சக்திகள் மக்களை தவறான வழிக்கு திசை திருப்ப முனைகின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்பு குறித்து கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்ட பிரதமர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதான முயற்சிகளை குழப்பும் எவரிற்கும் இடமளிக்க மாட்டோம்.

இத் தீய சக்திகளை எவ்வாறு கட்டுப் படுத்துவது என எமக்கு தெரியும்.

தற்போது நிலவிவரும் சமாதான சூழலில் நாட்டின் பொருளாதாரத்தினையும் வளங்களையும் மேம்படுத்தக் கூடியதாக உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த 2 தசாப்தங்களாக நீடித்த இனப் பிரச்சினையை ஒரே முறையில்தீர்வுகாண நினைப்பது முட்டாள் தனம் என்றும் கூறியுள்ளார். (உ-10)

## இலகு கடன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சேவையில் முதற்கட்டமாக 10 பேரிற்கு கடன்உதவி வழங்கப்பட்டு சுழற்சி முறையில் அதற்கான பணம் மீளச் செலுத்தப்பட்டதை அடுத்து, அடுத்த கட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

(உ-23)

## தினசரி தியானம்

### ஆரோக்கிய வாழ்க்கை

யோகசாதனைக்குச் சோம்பல் ஒரு பெரிய தடை. அதை முழுமையாகப் போக்க வேண்டும். ஆசனப் பயிற்சிகளும், பிராணாயாமப் பயிற்சிகளும் இந்தத் தொல்லையைப் போக்குபவை. தியானத்துக்கு முன் இப்பயிற்சியைச் செய்யுங்கள்: காலையில் காலங்கடந்து எழும் பழைய பழக்கத்தை விட்டுவிட்டுப் புதிய ஆரோக்கியமான வழக்கத்தை நிலை நாட்டுங்கள். படுக்கையிலிருந்து எழுந்ததும் சிரசாசனம் செய்யுங்கள். சோம்பல் விரைவில் மறைந்துவிடும்.

சுவாமி சிவானந்தர்

## இராசி பலன்

01-11-2002

(ஐப்பசி 15, வெள்ளி)

ஏகாதசி ந.ப 12-20 வரை
பூரம் ந.ப 12 38 வரை
இராகு காலம் 10 33-12.03
நல்லநேரம் 6.03 - 7.33
மூன்றாம் ஐப்பசி வெள்ளி
ஏகாதசி விரதம்

**மேடம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, குடும்பக் கவலை, காரியதாமதம்.

**இடபம்**
மாணவர் கல்வியில் ஆர்வம், உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி.

**மிதுனம்**
காரிய நன்மை, இனிய சம்பவம், கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை.

**கடகம்**
தேவையற்ற வார்த்தை, சகோதரர் உதவி, பொருள் விரயம், கற்பனை மிகுதி.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், பெரியோர் ஆதரவு, காரியசித்தி புதிய பொருள் சேர்க்கை.

**கன்னி**
உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், உறவினர் வருகை தனவிரயம்.

**துலாம்**
பொருள் சேர்க்கை,தெய்வ நம்பிக்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி, கீர்த்தி.

**விருச்சிகம்**
அதிகார நிலை, செய்தொழில் முன்னேற்றம், தூரத்தசச் செய்தி, பிறர் உதவி.

**தனுசு**
கட்டுப்பாடுஉடல் உழைப்பு தொழிலில் புதிய மாற்றம் உடல உபாதை.

**மகரம்**
காரிய தாமதம், வாகன பயம், உறவினர் மனஸ்தாபம், திடீர் நன்மை.

**கும்பம்**
நண்பர்கள் சந்திப்பு, கௌரவம், காரிய அனுகூலம், தெய்வ தரிசனம்,

**மீனம்**
தேகநலம், காரிய சித்தி, பிரயாணசுகம், செய்தொழில் விருத்தி

பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்

## மத்திய வங்கி....

நான்காம் எதிரி பார்த்தீபனுக்கு இருபது வருடங்கள் கடுழியச் சிறைத தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அதேநேரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் 5ஆம் எதிரி கதிர்காமத்தம்பி சிவகுமார் தொடர்பான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 15ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணைகளில் நான்காம், ஐந்தாம் எதிரிகளே நீதிமன்றத்திற்கு ஒழுங்காக ஆஜரானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்பட்ட இரண்டாம் எதிரியான விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், மூன்றாம் எதிரியான சாள்ஸ் மாஸ்ரர், ஏழாம் எதிரியான இராஜதுரை, பத்தாம் எதிரியான பாபாஜி ஆகியோரை குற்றவாளிகள் என்று நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறிய நீதிபதி சரத் அம்பேபிட்டிய அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இக் குண்டு தாக்குதலால் 76 பேர் கொல்லப்பட்டதாகவும், 550 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்ததாகவும் நீதிபதி தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2ம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்திருக்கும் இவ் வேளையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது குற்றம் சுமத்தி தீர்ப்பு வெளியிடப்பட்டிருப்பது சமாதான முயற்சிகளைப் பாதிக்குமா என்று அரசியல் ஆய்வாளர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டு தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் ஒருபோதும் ஆஜராகாதவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## மாளிகாவத்தையில்..

களை அடுத்து பொரளை, மத்திய கொழும்பு, கொழும்பு வடக்குப் பகுதிகளில் உள்ள சகல பாடசாலைகளையும் இன்று மூடுமாறு கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித் துவக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இன வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் பெருமளவு பொலிசாரும், கலகம் அடக்கும் பொலி சாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை, கிரன்பாஸ், தெமட்டகொட, பொரளை, மாளிகாவத்தை புதுக்கடை, முகத்துவாரம் பகுதிகளில் நேற்று பிற்பகல் 2மணியிலிருந்து இன்று அதிகாலை 6மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதுடன் இன்று முஸ்லீம்களின் தொழுகை முடிந்தவுடன் மீண்டும் இன்று பிற்பகல் 2மணி முதல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு நாளைக் காலை 6மணி வரை அமுல் படுத்தப்படும் எனவும் நேற்றைய மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக மக்களை அமைதியாக இருக்குமாறும், வன்முறையில் இறங்க வேண்டாம் என்றும் வதந்திகளுக்குச் செவிமடுக்க வேண்டாம் என்றும், ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, மாளிகாவத்தையில் இடம்பெற்ற இன மோதல்களுக்கு இரண்டு அரசியல் கட்சிகள் பின்னணியில் இருப்பதாகவும், இது சம்பந்தமான விசாரணைகள் மேற் கொள்ளப் பட்டு சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும் என்றும் உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

(ம)

## சாவகச்சேரியில்...

பொதுமக்கள் நேற்றைய தினம் சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகம் இயங்கவில்லை. செயலக ஊழியர்கள் கடமைக்கு வந்திருந்த போதிலும் செயலகம் திறக்கப்பட முடியாமல் இருந்தமையால் அவர்கள் வீடு திரும்பினர்.

இதேவேளை மேற்படி பகுதியைச் சேர்ந்த பொதுமக்களால் பிரதேச செயலருக்கு முன்பு கையளிக்கப்பட்ட மகஜருக்கு எந்த விதமான பதிலும் இதுவரை வழங்கப் படவில்லை என்பதால் இம் மறியல் போராட்டம் இன்றும் தொடரும் எனத தெரிவிக்கபபட்டுள்ளது. (இ-77)

## அரசு - புலிகள்...

கள் அனைவரும் பேச்சுவார்த்தை நடைபெறும் ஹோட்டலுக்கு அழைத்து வரப்படனர்.

இப் பேச்சு வார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம், விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு அம்பாறை விசேட தளபதி கேணல் கருணா, சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன், புனர்வாழ்வு நிபுணர் ஜோஜ் மகேஸ்வரன் ஆகியோரும்,

அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதான செயலணிப் பொறுப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக அரசு புலிகளின் தரப்பில் பேச்சு வார்த்தைக்கு தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிசும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் மலர்ந்த முகத்துடன் கைலாகு கொடுத்து பேச்சுக்களை ஆரம்பித்தனர்.

### நோர்வேயின் நடுநிலையாளர்

நேற்று ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தையின் போது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், நோர்வேயின் பிரதிநிதி தோமஸ் ஆகியோர் நடுநிலையாளர்களாகப் பணியாற்றினர்.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எந்தவிதமான கருத்தும் தெரிவிக்காத போதும் அரசு தரப்பில் பேச்சு வார்த்தைக்கு தலைமை தாங்கிய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்:-

வடக்கு கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(ம)

## உயர் நீதிமன்ற.....

பட்டதை அடுத்து அவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 200 வருட கடுழியச்சிறைத்தண்டனை விதித்து தீர்பளித்துள்ளது.

இத் தீர்ப்பை அடுத்து தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பு பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

உயர் நீதிமன்றத் தீர்ப்பு பற்றி என்னால் எதுவும் கூறமுடியாது. நீதிமன்றம் தனது கடமையைச் செய்துள்ளது. எனினும் இத் தீர்ப்பு தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையை பாதிக்காது என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

## வடமராட்சிக்....

ளனர்.

வடமராட்சிப்பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் சசிக்குமார் (வயது 20), செல்வநாயகம் இளவாணன் வயது (17), விஜயரட்ணம் விஜயகுமார் வயது (வயது 24) ஆகிய மூவரையுமே காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை இம் மீனவர்களைத் தேடும் பணியில் வடமராட்சி கடற்தொழிலாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-23)


**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்**
நடாத்தும்
**இலவச கண் சிகிச்சை முகாம்**
We Serve

விழிவெண்படலக் குறைபாடு காரணமாக பார்வை பாதிக்கப்பட்ட நலிந்த மக்களின் குறை தீர்க்கும் பணியில் கண்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் அவர்கள் நோயாளிகளை பார்வையிடுவார். சத்திர சிகிச்சை தேவைப்படுவோருக்கு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட மக்கள் இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இடம : செங்குந்தா இந்துக்கல்லூரி, திருநெல்வேலி கிழக்கு
காலம: 03.11.2002 காலை 8.30 - 1.30மணிவரை

லயன் கலாநிதி க.குணராஜா, தலைவர்
லயன் வ.ஸ்ரீதரன், செயலாளர்
லயன் S.தனபாலசிங்கம், பொருளாளர்

(6159)



**செல்வா SELVAH**
மின்சார உபகரணங்கள் பைப் வகைகள் விற்பனையாளர்கள்
குறைந்த விலையில் தரமான பொருட்களுக்கு தனிச்சிறப்பு வாய்ந்த விற்பனை நிலையம்

NOTE:- கட்டடங்களுக்கான மின் இணைப்பு (வயறிங்), பைப்லைனிங் (பிளமிங்) வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

இல. 68, பலாலி வீதி
திருநெல்வேலி சந்தி

[C/5201]


# அரசாங்க கேள்விப் பத்திர அறிவித்தல்
## யாழ் மாவட்ட செயலகம்

மேற்படி விடயம் தொடர்பான எமது 2002.09.25ஆந் திகதிய வலம்புரி பத்திரிகையில் வெளியான அறிவித்தல் இரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இவ்வறிவித்தல் நடைமுறைக்கு வருகின்றது. தயவுசெய்து இவ் அறிவித்தலுக்கு அமைவாக கேள்விகளை வழங்கு மாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவை தொடர்பான பூரண விபரங்களையும் விண்ணப்ப படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ரூபா **10,000/-** ஐ மீளளிக்க கூடிய வைப்புச் செய்து உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.

விண்ணப்பங்களை அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "தளபாட உபகரணங்களிற்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2002.11.18ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அப்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

**பொருட்கள் விபரம்**

1. கணனித் தொகுதி
2. கணனிப் பதி கருவி (Printer)
3. அழைப்பு மணி (Calling Bell)
4. மேசை மின்விசிறி (Table Fan)
5. துளை கருவி (Punsher)
6. Stepler
7. மரத்தளபாடங்கள்
   அ. சாய்மனை வாங்கு (Bench)
   ஆ. தட்டச்சு கதிரை (Typist Chair)
8. உருக்குத் தளபாடங்கள்
   அ. அலுமாரி
   ஆ. கோவை அலுமாரி
   இ. தட்டச்சாளர் கதிரை (Typist Chair)
9. றோணியோ இயந்திரம்
10. அலுவலகப் பை (Office Bag)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்
யாழ் மாவட்டம்

[C/5203]


**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்**

காலம : 02.11.2002 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம் : ஒறேற்றர் மண்டபம்

தலைவர்
திருமிகு. க.சிவாஜி அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்
கலாநிதி சி.மகேசன் அவர்கள்
B.sc(Hons), M.sc(CARDIFF), ph.D, M.B.C.S.C.Eng
(தலைவர், கணனித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

ஆசியுரை
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
(தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

நிறுவுநர் நினைவுப் பேருரை
கலாநிதி பொ.நவரட்ணம் (B.sc, M.sc,ph.D)
(சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரிரசாயனத்துறை, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்கல்
திருமதி ராஜசிவசக்தி மகேசன் அவர்கள (B.sc, M.sc)
(பகுப்பாய்வாளர், கணனித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நிறைவுரை
திருமிகு ஆறுதிருமுருகன் அவர்கள்
(ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை
சுன்னாகம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்

(6160)



**தினமும் விமான சேவைகள்**

விமானப் பயணிகள் நன்மைகருதி வாரத்தில் 7 நாட்களும் காலை, மாலை விமான சேவைகளான

எக்ஸ்போ


லயன் ஏயார்


செரண்டிப்


ஆகிய மூன்று விமான சேவைகளின் பயணச்சீட்டுக்களையும்
30.10.2002 தொடக்கம்
ஸ்ரான்லி வீதி, இல.22, மகாலட்சுமி கட்டடத்தில்
அமைந்துள்ள தனித்தனி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. NO:- 021 - 222 3564, 021 - 222 2024, 0777 - 357109

[C/5202]